# இந்துசாதனம்

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூ௩] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷம் வைகாசி மீ எஉ செவ்வாய்க்கிழமை (20 May 1952) [இல - ௬௨]


அசிரியர் அலை

## தேர்தல் மேடைகளிற் குடம் ஊதுவோர்!

### பக்கவாத்தியம் மிக்கதான தெரிவுக் கச்சேரி

தேர்தற் கூட்டங்கள் என்றால் உயர் தர திருவிழாக்களே. சங்கீதவித்வான்களின் கச்சேரியும் நாட்டியப் பெண்களின் பரத நடிப்பும் எப்படி........ மிதமிஞ்சி சுவாமி எழுந்தருளுதலை ஒரு சிறு காரியமாக்குகின்றனவோ அப்படியே அபேட்சகர்கள் சார்பாக வந்து வாத்தியம் வாசிப்பவர்களும் குடம் ஊதுவோரும் அபேட்சகர்களின் பேச்சுகளை இரண்டாம்படியில் இறக்கிவிடுகின்றனர்!

தேர்தற் பிரசாரம் என்றால் அபேட்சகர்கள் ஒவ்வொரு பகுதிக்குஞ் சென்று மாபெருங்கூட்டத்திலே தங்கள் கொள்கைகளையும் தங்கள் திட்டங்களையும் தங்களைப்பற்றி மற்றையோர் கொண்ட விபரீத விளக்கங்களையும் தெளிவாக விளக்கிக் காட்டுவதே.

ஒவ்வொரு அபேட்சகரும் வாய்ப்பாட்டு வித்துவானாக பக்கவாத்தியகாரர் தம்புரு வீணை, குழல், குடம், சல்லாரி ஆதியனவற்றை உபயோகித்து இசை மீட்பவர்களாக இருந்தாலும் ஒரு அளவாயிருக்கும். வாய்ப்பாட்டு வித்துவானை சயனிக்க விட்டு, பக்கவாத்தியகாரர் தனித் தனி தங்கள் வித்துவத் தன்மையைக்காட்டி கூட்டநேரம் முழுவதையும் எடுத்துவிடுகிறார்.

எல்லாக் கட்சியினருக்கும் இந்தப் பக்கவாத்தியகாரர் குறிக்கப்பட்டவர்களே. எந்தக் கூட்டத்திற் பேசினாலும் அந்தப் பழைய கதைதான். கூட்டங்களிற் பேச்சை அநுபவிக்கும் பொதுசனம் இந்தவாத்தியக்காரரின் சொந்தக் கானத்தைத் திரும்பவும் கேட்டு வெறுப்படைகிறார்கள்.

அரசியல் மேடையிற் குடம் ஊதும் பக்க வித்துவான்கள் அபேட்சகர்களுக்கு நன்மை செய்கின்றார்களா? தீமைபுரிகின்றார்களா. அபேட்சகர்களை அவர்கள் பாட்டிலே விட்டாற் பொதுசனம் அவர்தமை நன்றாயறிய முடியுமல்லவா?

## ஆகாத முறையில் ஆக்கந் தேடலாமா?

### மது நீங்கினாற் பொது நன்மை ஓங்குமே

சுதந்திர நாட்டில் யாவருக்கும் பூரண சுதந்திரம் இருக்கவேண்டுமென்றும், ஆகையினாலே மதுபான விஷயத்தில் மக்களுடைய சுதந்திரத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தக்கூடாதென்றும், குடிகாரரைப் பிரசாரத்தாற் திருத்தலாமென்றும் சிலர் வாதிக்கின்றனர். நல்லன செய்வதற்குச் சுதந்திரம் வேண்டுமேயன்றி அல்லன புரிதற்கன்றென்பது,

> "கட்டுப்பாடில்லாதார்
> கானகத்தில் வாழுகின்ற
> துட்டவிலங் கொப்பார்"

என்னும் ஆப்த வாக்கியத்தாற் றெள்ளிதிலுணரப்படும். மதுபானஞ் செய்து மதிமயங்கினோர்க்குப் புத்தி புகட்டலிலும் சட்ட மூலமாக அவர்களைக் கட்டுப்படுத்தித் திருத்துவதே இக்காலத்திற் சாலச் சிறந்த முறையாகும்.

> "நெஞ்சகம் நின்று நினைக்கும்
> பொருளைப்
> பஞ்சமா பாதகர் பாரினில்
> அறிந்திலர்"

என்றும்,

செல்வச்சந்நிதி
திரு. ச. முருகேசு
எழுதுவது

> "மாசுடை மதுவகை
> நீக்கிடல் இன்பம்"

என்றும்,

> "பொருள் கொடுத்து
> மெய்யறியாமை கொளல்"

எனவும் வரும் பொய்யாமொழிகளால் மதுபானம் உண்டலால் வரும் தீமையும், ஒழித்தலால் வரும் நன்மையும் இனிது விளங்கும்.

கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் பஞ்சமா பாதகங்களில் கொலை, களவு, காமம், பொய் என்பவற்றைக் கட்டுப்படுத்தச் சட்டங்களிருக்கின்றன வென்பதை எவரும் அறிவர். தங்கள் கலையே குறிக்கோளாகக் கொண்ட ஆங்கிலேயர் மதுவிலக்குச் சட்டத்தை ஆதரிக்காதது நூதனமல்ல.

இலங்கை மக்களின் இன்பத்தையே விரும்பும் தற்போதைய சுதந்திர அரசாங்கம் பஞ்சமா பாதகங்களில் மிகக் கொடியதும் ஏனைய பாதகங்கள் நாலுக்கும் ஏதுவாயிருக்கின்றதுமான மதுபானத்தை விலக்கச் சட்டம் இயற்றவேண்டியது அத்தியாவசியம் என்பது சொல்லவும் வேண்டுமா?

### வருவாய் குறையுமா?

மதுபானத்தை ஒழித்தால் அரசாங்கத்துக்கு வருமான வரவு குறைந்துபோகுமென்று சிலர் கருதக்கூடும். ஆனால் வருமானம் குறையும் என்ற அச்சத்தால் தீய நெறியிற் பொருளீட்டலாகாது. தீய நெறியிற் பொருளீட்டினால் தீமையே விளையும். பொருள் இன்மையே பெருகும்.

> "இலனென்று தீயவை
> செய்யற்க செய்யின்
> இலனாகு மற்றும்பெயர்த்து"

எனவரும் திருக்குறட் பாவால் இவ்வுண்மை இனிது விளங்குதல் காண்க.

தகாத நெறியிற் பொருளீட்டலாமென்றால் ஏனைய பஞ்சமாபாதகங்களையும் நாட்டில் விருத்தி செய்து அதனால் மிக ஏராளமான பொருளீட்டலாமே! அப்படிச் செய்வோமா?

மதுபானத்தைத் தற்போது கள் விற்கச் சீவனஞ் செய்பவர்க

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## இலங்கை இந்தியர் வாக்குரிமை

### தலைவர் பிரசாட் அவர்கள் கருத்து

இலங்கை இந்தியர்களுக்கு வாக்குரிமை கொடாதுவிடுதல் ஆபத்தான நிலைமையையும் சிக்கல்களையும் விளைக்கும். ஏனைய மக்களைப்போலவே அங்குள்ள இந்திய மக்களும் தங்கள் பிறப்புரிமையைக் கேட்கின்றனா. இலங்கைக்கும் எங்களுக்கும் உள்ள தொடர்பு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தியது. எங்கள் தொடர்பு மிகுந்த நட்புரிமையுடையதாயிருந்தது. இலங்கையின் சுதந்திரத்தை நாங்கள் வரவேற்றோம். அவர்கள் ஒவ்வொரு துறையிலும் சுயாதீன மக்களாய் முன்னேறுவார்களென நம்பியிருந்தோம்.

ஆனால் உண்மையான முன்னேற்றம் பெருந்தொகை மக்களுடைய பிறப்புரிமைகளை ஒழிப்பதால் வரமாட்டாது. இது ஆபத்தான நிலைமையையும் சிக்கல்களையும் விளைக்கும்.

## தேர்தலுக்காகும் திருக்குறள் 6.

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று —வள்ளுவர்.

### தேர்தற் புத்துரை:

தேர்தற் காலத்துக்கு முன், கொழுந்துவிட்டெரியும் கோபம் பொங்கக் கூடிய கொடிய எதிரிதானும், தேர்தற் காலத்திலே வந்து கூடுவாரேயானால், அக்கோபந் தணிந்து அவருக்கு உதவி செய்வது நன்மைபயக்கும் என்க.

உ

## என்மனத் துள்ளே எழுகின்ற சோதியே!

திருச்சிற்றம்பலம்

இரந்திரந் துருக என்மனத் துள்ளே எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய் திருப்பெருந் துறையுறை
சிவனே
நிரந்தரா காயநீர் நிலந் தீகால் ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோ ருருவே களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

திருச்சிற்றம்பலம்

## கோன் கழல் பணிந்த கோக்கழற் சிங்கர்

### இறைமேல் ஈடிலா அன்புமிக்க அடியார்

படியிலசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார்.

பல்லவர் குலத்துதித்த காடவர் அரசனாகிய கழற்சிங்க நாயனார் என்பவர், சிவபெருமானுடைய திருவடிகளையே யன்றி மற்றொன்றையும் தமது அறிவிற் காணாதவராய் வாழ்ந்து, திருவருள் வலிமையினாலே வடபுலத்தரசர்களை வென்று அவர்கள் நாடுகளைப் பற்றி, எங்குஞ் சைவத் திருநெறி தழைத்தோங்குமாறு அரசாண்டார்.

அந்நாளிலே சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருக்கோயில்களுக்குச் சென்று அன்புடன் வழிபடுவாராகித் திருவாரூரையடைந்து சுவாமியைத் தரிசித்து வணங்கும் பொழுது, அவரது மாதேவியார் திருக்கோயிலை வலம்வந்து, அங்குள்ள சிறப்புக்களைக் கண்ணுற்று வரும்பொழுது, திருமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத்திலே கிடந்த ஒரு புதுப் பூவை எடுத்து மோந்தார். இதைக்கண்ட செருத்துணை நாயனார், அம் மலரை, மலர் மண்டபத்துள்ளிருந்து எடுத்து மோந்தாரென நினைந்து, அவருடைய மூக்கைப் பிடித்து அரிந்தார். அம்மையார் இரத்தஞ் சொரியச் சோர்ந்து வீழ்ந்து கிடந்து புலம்பும் பொழுது, கழற்சிங்க நாயனார் கண்டு இக்கொடுஞ் செயலை அஞ்சாது செய்தவர் யார் என வினவினர். செருத்துணை நாயனார் முன்வந்து நடந்ததைச் சொன்னார். அக் குற்றத்துக்குத் தண்டம் அக் குற்றஞ் செய்த கையைத் துணித்தலன்றோ என்று சொல்லிக் கழற்சிங்க நாயனார் தமது உடைவாளையுருவி அம்மையாருடைய கையைத் துணித்தார் - தொண்டர் குழாங்களும தேவர்களும் ஆர்த்தார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

> ஒருதனித் தேவி செங்கை
> உடைவாளால் துணித்த போது
> பெருகிய தொண்டர் ஆர்ப்பின்
> பிறங்கொலி புவிமேற் பொங்க
> இருவிசும் படைய ஓங்கும்
> இமையவர் ஆர்ப்பும் விம்மி
> மருவிய தெய்வ வாச
> மலர்மழை பொழிந்த தன்றே.

அத்தகைய அருஞ் செயலைச் செய்த கழற்சிங்க நாயனார் நெடுங்காலம் அரசாண்டு, சிவபிரானது திருவடிநீழலையடைந்தார்.

அரியஅத் திருத்தொண் டாற்றும் அரசனார் அளவில் காலம்
மருவிய உரிமை தாங்கி மாலயற் கரியார் மன்னும்
திருவருட் சிறப்பி னாலே செய்யசே வடியின் நீழற்
பருகிய உரிமை யாகும் பேருள் எய்தி னாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞூ வைகாசி மீ எ௨ செவ்வாய்க்கிழமை

## அபேட்சகர்களின் - - ஆதரவாளர்களுக்கு

தேர்தல் நாட்கள் அண்மித்து வருகின்றன. கட்சி கட்டி நடக்கும் எவ்வித தேர்தலிலும் அபிமானம் எழுவது உண்மையே. எனினும் அபிமானம் வீராவேசமாகிப் பின் வேதனையைக் கொடுக்கும் வினையாய் முடிவது தமிழ்மரபாகாது.

அபேட்சகர்கள் தலைவிதி எவ்வாறுகுமோஎன்று நிலை தடுமாறி நிற்கும் நேரத்தில் அவர்களுடைய ஆதரவாளர்கள் மிதமிஞ்சிய அபிமானத்தால் எதைத்தாம் பெற்றுவிட எத்தனிக்கின்றார்களோ அதையே தடுப்பதற்கான வழிவகைகளைத் தம்மை அறியாமலே செய்துவிடுகிறார்கள். அபேட்சகர்களின் அநுமதியின்றி அவர்கள் ஆலோசனை பெறாது அநேக அலங்கோலச் செயல்கள் எல்லாத் தொகுதிகளிலும் நடைபெறுகின்றன. "ஊருக்கு எளியவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்றமாதிரி, ஆர் என்ன குற்றஞ் செய்த பொழுதிலும் அபேட்சகர்கள் மீதே அது சுமத்துப் படுவதும் வழக்கமாய்விட்டது. இதற்கெல்லாம் காரணர்களாக இருப்பவர்கள் அபேட்சகர்களுக்கு ஆதரவளிக்கும் அபிமானிகளே.

ஆதரவளிக்கும் அன்பர்கள் தங்கள் கட்சிகளினதும் அபேட்சகர்களினதும் நன்மையை விரும்பியே எதையும் செய்வார்கள் எனினும் உணர்ச்சி வேகத்தில் ஊக்கம் ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் ஆயாது செய்யும் எக் கருமமும் தீங்கை விளைவிக்கும் என்ற அச்சம் இல்லாதவர்களாய் ஆதரவாளர்கள் தமது உதவியைப் புரிவதற்காகக் கையாளும்முறைகள் ஈற்றிலே தவறானவையாய் அமைந்துவிடும் என்பது உலக அநுபவம்.

ஆதரவளிப்பதில் இருமுறைகள் உண்டு. ஆக்க நெறி ஒன்று. அகற்றும் முறை ஒன்று. தங்கள் கட்சியின் நன்மைக்காக அதன் முன்னேற்றத்திற்காக அது வெற்றி அடைவதற்காக வேண்டிய ஆக்க அலுவல்களைப் புரிவது செம்மையான ஓர் வழி அது தீமை பயவாது நன்மையே தரும்.

இந்த ஆக்க முறையில் துவேஷம் இருக்க முடியாது. தூற்றுதல் இடம் பெறாது, எவரும் கண்டு அநுதாபம் கொள்ளும் தெய்வசக்தி யுடையதாயுள்ளது, தருமநெறிக் கியைந்தது.

அகற்றும் நெறியோ சிலவற்றையோ பலவற்றையோ இல்லாதொழிப்பது. கூட்டங்களைக் குலைப்பதுவும் கல்வீசுவதும், எதிரே நின்று ஆர்ப்பாட்டஞ் செய்வதும், மற்றையவர்களின் கொடிகளையும் சின்னங்களையுங் கைப்பற்றுவதும் இன்ன பிறவும் இயல்பாயுள்ள அநுதாபத்தையும் இல்லாது போக்கடிக்கும் ஒருபிழையானவழியாகும். அன்றியும் அபேட்சகர்களுக்கு வீண்பழியைச் சுமத்துவிக்கும் ஒருஅவசியமற்ற செய்கையுமாகும்.

வாக்காளர்களில் அநேகர் ஒரு அபேட்சகரிடத்தும் அபிமானங் கொள்ளாதவர்கள்போல நடித்துக் குறிக்கப்பட்ட நாளில் தங்கள் வாக்குரிமையை மனச்சான்றுக் கமைய வழங்குவார்கள். அவர்களே விவேகிகள், அநுபவசாலிகள், உண்மையாய் உலகியல் உணர்ந்தவர்கள். ஏனைய சிறு பாலார் எதற்காக இந்த ஆகாச்செயல்களைப் புரிந்து நாட்டிற்குத் துரோகஞ் செய்கிறார்கள்.

நியாயமான வகையிலே வாக்காளர்களின் அநுதாபம் பெறுவதா? அல்லது அவர்களை ஆடு மாடு போன்ற மிருகங்களுக்குச் சமானமாகப் பாவித்து எவ்வகையிலும் இயக்கலாம் என்று எண்ணித் தீமை புரிந்து அவர்கள் வெறுப்பை அடைவதா? எது சிறந்த வழி என்பதை அபேட்சகர்களுக்கு அநுதாபங் காட்டி அபிமான மேலீட்டினுல் ஆகாதன இயற்றுகின்றவர்களை நாம் கேட்கின்றோம்.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### தேர்தற் பேச்சு நடை

மங்கல வார்த்தையன்றி அமங்கல மொழியை எந்த ஒரு சிறு சபையிலும் தமிழ்க் குலாசார அபிமானிகள் கையாள மாட்டார்கள். ஆனுல் தேர்தல் மேடை புறநடையாகிவிட்டது போலும்! பேச்சாளர்கள் வாக்காளர்களுக்குப் பலவித அமுது வழங்குகின்றார்கள். நகைச்சுவை, பகைச்சுவை, கேலிச்சுவை, போலிச்சுவை, மங்கலச்சுவை, அமங்கலச்சுவை என்று இன்னமும் பல உள. அமங்கலச் சொற் பிரயோகஞ் செய்பவர்களுக்கு கலைவாணி கடுக் தண்டனை இடுவாள் என்று ஏங்கி நிற்பார்கள் அந்நாட் புலவர்கள் பேச்சாளர்கள். ஆகவே யோசித்துப் பேசுவார்கள்.

### இது நிலைத்துவிடுமா?

இந்தச் சமயோசித நடை நிலைத்துவிடுமா? அல்லது இக்காலப் பத்திரிகைத் தமிழ், மணிப்பிரவாள நடையோல நின்று வேரூன்றிவிடுமா? ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் வாங்கிவிடுகிறார்கள். தேர்தற்காலச் சொற்பிரயோகத்தையும் பத்திரிகை ஆங்கிலத் தமிழ் உபயோகத்தையும் ஒருங்கு சேர்த்தால் இன்னம் ஒரு புதுவித மொழி அநுபவ நடையில் வந்துவிடும்.

### தனித் தமிழ்ச் சொற்கள் இல்லாது போய்விடுமா?

காலப்போக்கை நோக்குமிடத்து வடமொழிதென்மொழி என்ற பேரிலே தமிழ்மொழி மெலிந்து வந்ததும் மெலிந்த தமிழ்மொழியில் மேல்மொழி என்ற ஆங்கிலமும் கலந்துவிட்டால் உண்மையாகத் தமிழ்மொழி தன் இனம் தெரியாது வேறுருவம் கொண்டு வெளிவரவேண்டி நேரிடும்.

### எழுத்துஉருவத்திற்கும் ஆபத்தா?

அதோடு வேறொரு தாக்கல். புதுவிதத் தமிழ் எழுத்து. சீர்திருத்தம் வேண்டும். எல்லாவற்றிலும் வேண்டுமாம், ஆதி மொழி. ஆனந்த மொழி, அகத்தியர் அறிந்த மொழி; எழுத்து ஒருவிதம். புதுமை உலகத் தமிழன் விரும்பும் எழுத்துப் பிறிதொரு விதம். நேரம் போவதற்கு ஆரவாரம் வேண்டுபவர்கள் போன்று இச் சீர்திருத்த வாதிகள் தங்கள் நேரத்தைச் செலவு செய்வதை ஆர் ஏன் ஆட்சேபிக்க வேண்டும். ஆனுல அந்தத் திருத்தம் அவர்கள் மட்டில் இருந்துவிட்டாற் போதும். தமிழ்மொழி எழுத்து உருவத்தைத் திருத்தியமைக்கும் பிரமாக்கள் இப்போது தேவையில்லை. இவர்கள் தமிழ்மொழி உருவம் திருத்திப் பின் தமிழ்தந்த தலைவன் உருவத்தையும் அரு உருவத்தையும் தங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள்போலும்;

## சட்ட விரோதமான வரவுத் தொகை

இந்தியாவிலிருந்து இரகசியமாய் இலங்கைக்கு வருவோர் தொகை மிக அதிகரிக்கிறதென்பது இலங்கையிலுள்ளோர் சிலருடைய கருத்து. இந்தக் கொள்கை பரவுவதைக் கண்ட இந்திய அரசாங்கப் பிரதிநிதி ஒரு மறுப்பு வெளியிட்டிருக்கிறார். வருவோர் தொகையல்ல அகப்படுவோர் [illegible] புறுத்தப்படுகின்றது.

## வழியறியா வழிப்போக்கனுக்குவழி

### ஒழுக்கமுடையோருக்கு உதவி

ஐயா வழியறியா தவரே! அறிஞர் என்போர் எந்த விஷயத்தையும், நான் எனது என்னும் அகங்கார, மமகாரத் திரைகளால் மறைபடவிடாது, தராசுக்கோலானது தன் தட்டுகளிலே இட்ட பொருள்களின் நிறையை உள்ளவாறு காட்டுவதுபோல, நடுவு நிலைமை தவறாது விளக்கிக் காட்டக்கூடியவரா யிருப்பர். "சமன் செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற் — கோடாமை சான்றோர்க் கணி" என்பது இந்த உண்மையை எங்கள் யாவருக்கும் விளக்க எழுந்தது. யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்றபடி எங்கள் பாராளுமன்ற அபேட்சகர்கள் எது செய்யத்தக்கவர்கள் எது விடத்தக்கவர்கள் என்பது அவர்களுடைய பிரசாரங்களின் தன்மைகளாலும் அவர்களும் அவர்களை ஆதரிப்பவர்களும் பேசும் பேச்சுக்களாலும் செய்யும் செயல்களாலும் ஒருவாறு அறியலாம். எல்லை கடந்த பிரசாரப் போட்டிகளோ எல்லோரையுந் தள்ளாடச் செய்கின்றன. அறிவு மழுங்கிக் "கொடிறும் பேதையுங் கொண்டது விடா' என்றபடி பிடிவாத நோயாற் பிடிக்கப்பட்டவர்களாயே பெரும்பான்மையோர் உலாவுகின்றனர். இந்தக் காலத்திலா கடவுளுடைய நிலையைப் பற்றி அறிய நினைத்தீர்?

### அறநெறி ஒழுக்கம்

நீர் எடுத்துக்காட்டிய எடுத்துக் காட்டுக்களினுலேயே, கடவுள் எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் என்று சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் கொள்ளுகிறார்களென்பதை விளக்கிவிட்டீர். இக்குணங்கள் காலத்துககுக் காலம் மாறுவனவென்று யாராயினுஞ் சொல்ல நாம் கேட்டதில்லையே. கடவுள் என்றும் ஒரே தன்மையர். மக்களுடைய அறிவுநிலைதான் வினைப் பயன்களுக்குத் தக்கவாறு விளங்கியும் மழுங்கியும் வேறுபடும். இவ் வேறுபாடுகள் தான் எங்கள் சமுகத்தை இப்போ நிலைகுலைக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்திலும் நாங்கள் எங்களுக்கு நன்மையைப் பயக்கும் நல்வழியில் ஒழுகுவதற்கு உதவியாகத்தான அறமும அல்லதும இது இதுவென இறைவனுல் விளக்கி வகுக்கப் பட்டிருக்கின்றன. இவை 6-5-52 ல் வெளியான இந்துசாதன இதழில் விளக்கப்பெற்றிருந்ததை நீர் காணவில்லையா?

இருக்க, என்னுடைய எண்ணம் என்ன என்பதைச்சொல்லுகிறேன சிந்தித்துப் பாரும். நாங்கள் உறங்கும்போது எங்கள் நிலைமை என்னென்பது எங்களுக்குத் தெரியாது. இறக்கும போதும் என்ன நடப்பது என்று எங்களுக்குத் தெரியாது. இந்த நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கிற [illegible] தான் கடவுள் ஒருவர் உளர். அவராலேயே எல்லாம் நடக்கின்றன. அவர் வகுத்த வழியில் நாம் நடவாவிட்டால் வருவது துன்பமே என்று நாம் அறிந்தல்லவா தீயதைத் தவிர்த்து நல்லது செய்கிறோம். இதுதான் எங்கள் வாழ்க்கையின் அத்திவாரமாயிருப்பது. அறநெறியில் ஒழுகி எங்களுக்கு வழிகாட்டக் கூடியவர்களுக்கே எங்கள் வாக்குகளைக் கொடுக்க வேண்டும். இது தமிழ் மக்களுடைய வாழ்க்கைப் பண்பாட்டின் முதலாம் அறிகுறி. இதுவே உண்மைச் சுதந்திரத்துக்கு வழி. இதைக் கவனித்துக்கொள்ளும்,

### மானத்தைக் காக்க வாக்குக் கொடுத்தல்

இதையுங்கேளும். மானத்துக்காகஉயிரைத்தராணுந்தியாகஞ் செய்தல் எங்கள் மரபு. "மயிர் நீப்பின் வாழாக் கவரிமானன்ன — ருயிர்நீப்பர் மானம் வரின்" என்பது இதைக்குறிக்கின்றது. ஆகையால் எங்கள் மானத்துக்கு ஈனம் வரத்தக்க எதையுஞ் செய்யக் கூடாது. எந்தப் பெரிய நன்மைக்காகவும் மானபங்கம் விளைப்பதை நாம் செய்யக் கூடாது. "இன்றியமையாச் சிறப்பினவாயினும் — குன்றவருப விடல்" என்பது எங்கள் குறிக்கோள், எங்கள் வயிறு வளர்ப்புக்காகப் புகழக்கூடாதவரைப் புகழ்ந்து, மானமிழந்து இரந்து நிற்பராய் நிற்க மாட்டோம். அந்த உயர்ந்த வாழ்க்கை முறையை எவ்வளவு அழகாக ஔவைப்பிராட்டியார் எமக்கு அறிவுறுத்தியிருக்கின்றார். பாரும்,

பிச்சைக்கு மூத்த
குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி
இடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு
மான மழியா

தயிர்விடுகை சாலவுநம்", இந்த உயர்ந்த நெறியில் முன் ஒழுகி வந்தவர்களுக்கே இனியும் ஒழுகக்கூடியவர்களுக்கே எங்கள் வாக்குகளைக் கொடுக்கவேண்டும். இதுவே இப்போது நான் சொல்லத்தக்கது.

"வழிமருங்கு நின்றவன்"

உ

இந்துசாதன இயக்கர்:

### சென்னை ருயலசீமா பஞ்ச நிவாரண நிதி

| | ரு. ச. |
|---|---|
| முன் வரவு | 19 00 |
| திரு. K. கனகசபை | 1 00 |
| அக்காவணைப் பள்ளிக்கூட ஆசிரியர் திரு. மு. சஞான சேகரன் அவர்களும் பிள்ளைகளும் சேர்த்தது | 33 00 |
| மொத்தம் | 53 00 |

உதவுவோர் விரைந்து உதவுதல் வேண்டப்படும். இந்துசாதனக் காரியாலய அதிபருக் கனுப்புக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருவள்ளுவர்"

"எண்ணிய எண்ணியாங்
கெய்துப
எண்ணியர் திண்ணியராகப்
பெறின்"

வள்ளுவர் கூறிய வாய்மைகளில் ஒன்று இது. திண்மை பொருந்திய எண்ணமுடையவர் எண்ணியபடி எய்துவர்! அப்படியென்றால் நினைத்ததையெல்லாம் பெறக்கூடுமா? எதுவேண்டுமானாலும் நினைக்கலாமா? இது எண்ணுபவரின் உளச்சிறப்பை பொறுத்தது உயர்வுள்ளும் உள்ளமே எண்ணத்தின் திண்மையாகும். திண்ணமாவது வலிவு.

வாழ்க்கையிலே நாம் பெறுகின்ற இன்பதுன்பங்கள் நமது உள்ளத்தின் தரத்தையே பொறுத்திருக்கிறது. குறித்த நாளில் பொழுது புலர்ந்து வானில் மிதித்தேறி மாலையில் மேற்றிசையில் சென்று முடங்குவது கதிரவன் நமக்கு காட்டியவழி. இது உலகம் பூராவுக்கும் பொதுவானநிகழ்ச்சி. ஒரே அடிப்படையில் தான் நிகழ்கிறது என்றாலும் அன்றைய பொழுதுதான் 'உலகம்' அனைவருக்கும் ஒன்று போலவே தோன்றுகிறதா?

## மன்னனது காட்சி

அரண், அரண்மனை மேன்மாடத்தின் மீது தென்றல் தவழ்ந்துவர முத்துநகை செய்யும் பெண்களுடன் கூட மகிழ்ந்து உறங்கி விழிக்கிறான், சாளரத்தின் வழியாக உலகைப் பார்க்கிறான். உஷாதேவி வானில் செம்பட்டுச் சேலையுடுத்திச் சிரித்து மகிழும் காட்சி அவன் கண்களுக்குத் தென்படுகிறது.

வானை நோக்கிய மன்னன் நாற்புறமும் பார்க்கிறான். பலவித இயற்கையின் பங்குகள் அவன் கண்களுக்குத் தென்படுகின்றன அறையின் வெளியே பாணர்கள் துதிபாடும் சத்தம் கேட்கிறது. ஒருமுறை அன்றைய தினத்தில் செய்யவேண்டிய நிகழ்ச்சிகள் யாவும் அவன் அகத்தில் உருவாகிறது.

நாட்டிற்கு கலை வளர்ச்சியும், பொருள் வளர்ச்சியும் பகையழிப்பதும் செய்யவேண்டியது அவனது கடமையல்லவா? இனிமையும் வீரமும் ஆக்கமும் நிறைந்த உலகினை அவன் காணுகிறான்.

## எழுத்தாளனது வலை

ஒருஎழுத்தாளன், பொழுது விடியத்தான் செய்கிறது. அவனைச் சூழ பத்திரிகைக் கூட்டம் சிதறிக் கிடக்கின்றன. பழம்பாய் ஒன்றில் படுத்திருக்கிறான் சிலந்தி வலை பின்னுவதைப்போல் அவனும் மொழிகளை வலைபின்னிக்கொண்டிருக்கிறான். அவன் காணுகின்ற உலகம் மன்னன் கண்ட உலகத்திலும் வேறானது.

முதல்நாள் இரவு வீடுதோறும் இரந்தும் பிச்சை கிடைக்காமல் ஆற்றோரத்தே ஆலமரத்தடியில் படுத்துறங்கிப்போன பிச்சைக்காரன் ஒருவன். அன்று அதே பொழுது அவனுக்கும் விடிகிறது கண்விழித்ததும் அவன் கண்டகாட்சி அவன் உடலைத் தள்ளியெழச் செய்தது. பிச்சைவாங்கும் கப்பரையையும், கைத்தடியையும் காணோம், யாரோகளவுசெய்துவிட்டார்கள், அவனுடைய அந்த அரும் பொருளையும்! இன்று எந்த தெருவுக்குப் போனால் பிச்சை கிடைக்கும்? எதில்பிச்சைஎடுப்பது? என்ற ஏக்கம் பின்தொடர அவன் எழுந்திருக்கிறான், ஆனால் சோம்பலும், சோர்வும்அவனை ஆட்கொண்டு விட்டபடியால் எழுந்திருக்கக்கூட மனமின்றி மறுபடியும் படுத்து விடுகிறான். அவனது உலகம் மிகவும் கொடியதாக உருப்பெறுகிறது.

கோடானுகோடிப் பேர்வாழும் இந்த ஒரே உலகத்தில் நிமிஷந்தோறும் கோடானுகோடி எண்ணங்களில் வெவ்வேறு உலகங்கள் உதயமாகின்றன. அவை எண்ணங்களின்

[ ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி ]

வடிவுக்கேற்பவாழ்ந்துமடிந்து விடுகின்றன எனவே உலகம் அவரவர் உளத்திண்மைக்கேற்ப உருவாகின்ற விந்தையைப் பார்க்கின்றோம்.

"காணுறும் தோற்றம் யாவையும் மானதமாகுமால்" என்பது பாரதியார் வாக்கு. எண்ணத்தைச் சிறப்புறச் செய்வதன் மூலமே ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் இன்ப உலகத்தைப் படைத்துக் கொள்ளலாம் என்பது தெரிகிறதல்லவா? திண்ணியராக நின்று உயர்வு உள்ளும், உள்ளத்தினர் எண்ணுங்கால் எண்ணியாங்கு எய்துவர் என்ற வள்ளுவர் வாய்மை நமக்கு எவ்வளவு அரிய உண்மையைப் போதிக்கிறது!

திண்மையான எண்ணம் வலிமை மிகுந்த உள்ளத்தில் தோன்றும். வலிமை பொருந்திய உயிரில்தான் அத்தகைய உள்ளம் பிறக்கும். வலிமை கொண்ட உடல் இன்றி உயிர் அதில் வதியாது. இப்படி உணர்வும் உடலும் நெருங்கித் தொடர்பு கொண்டிருக்கும் மனித வாழ்வு அருமையானது.

உடலைக் கட்டு, உயிரைக் கட்டலாம். உயிரைக்கட்டு உள்ளத்தைக் கட்டலாம். உள்ளத்தைக் கட்டு சக்தியைக் கட்டலாம்.

"தோளை வலியுடையதாக்கி உடற்சோர்வும் பிணிபலவும் போக்கி அரிவாளைக்கொண்டு பிளந்தாலும் கட்டுமாறு உடல் உறுதி தந்து தவமேன்மை கொடுத்தருள வேண்டும்" என்று தெய்வத்தினிடம் வரம் கேட்கிறார் பாரதி. தனக்கு மட்டுமல்ல நமக்கும் சேர்த்தே தான்.

மண்ணின் துயரங்கள் நீக்கி விண்ணுக்குப் பாய்கின்ற வலிமை நமக்கு வசமாவது கூடும் என்பது பாரதியின் நம்பிக்கை. வள்ளுவர் பெருமான் கூறிய வாய்மைகளை எடுத்தாளாத கவிஞர் நமது நாட்டிலில்லை. பாரதியாரும் இதற்கு விலக்கல்ல வள்ளுவர்போல் பூமிதனில் யாங்கணும் புலவர் பிறந்ததில்லையென்று நமக்குக் கூறவந்த பாரதியார் குறளில கருத்துரைகளைப் போற்றியதுடன் தனது கவிதைகளால் அவற்றின் தெளிந்த அரிய கருத்துக்களையும் சுவைபட வடித்துக் கொடுத்திருக்கிறார். "அழகுத் தெய்வம்" என்றபாடலில், "எண்ணி ஞல் எண்ணியது நண்ணுங்காண் [illegible]" என்று அன்னை அவருக்கு [illegible] யதாக, அவர் எழுதியிருக்கிறார்.

வள்ளுவர் குரல் பாரதி கவிதையில் அங்கங்கே மின்னுவதைப் பாருங்கள்! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு இன்று வாடி நின்று வானை நோக்குகிறது கலாபம்போல தமிழ்மழை வேண்டும் என்று

ஒருவனை மற்றொருவன் பகைப்பதற்கும், வெறுப்பதற்கும் காரணம் பொறாமை. தான் துன்புற்றிருக்க, மற்றவன் சுகித்திருப்பதைப் பார்க்கும் அளவுக்கு மனித மனம் பண்படவில்லையென்பது நிச்சயம். பொறாமையால் வாடும் உள்ளத்தை செல்வ மழை சொண்டு மனிதன் விரும்புகிறான், பிறர் பொருளைப் பார்த்துப் பொருமுபவர் இக்காலத்தில் மட்டுமல்ல அந்தக் காலத்திலும் இருந்துதான் வந்திருக்கிறார்கள்.

கௌரவ வேந்தர் தலைவன் துரியோதனன் மன்னாதி மன்னனாக இருந்துங்கூட பஞ்சாளிக் காச்சலால் தாக்குண்டு தவித்தான். நன்றோ தீதோ செய்து பகைவரை வீழ்த்தவேண்டும் என்ற நினைப்பால் அவன் நெஞ்சு கொதித்தது. மாமன் சகுனியை அழைத்துச் சதியாலோசனை செய்தான் சகுனியும் அதற்கிணங்கி, மாயமண்டபம் ஒன்று கட்டுவித்து பாண்டவரை நய வஞ்சகமாய் அழைத்துவர விதுரனை அனுப்பும்படி திருதராஷ்டிரனைக் கேட்டான். மைத்துனனும் மகனும் தன்னைப்பெரும் பாதகச் செயல் செய்வதற்குத் தனது துணைவேண்டி நிற்பதைக் கண்டு அவன் திகைத்துப்போனான். "சிங்கத்தைப் போலச் சினந்து எதிர்நின்று தாக்குவாய், நரியைப் போல் நயவஞ்சனை புரியாதே" என்று சிறிது கடிந்துரைத்தும் மகன் மனம் மாறாது பிடிவாதமாக நிற்பதைக் கண்டு,

"வீரனுக்கே யிசைவார் — திரு
மேதினி எனுமிரு மனைவியர்
தாம்"

அல்லாதாருக்கு லக்ஷ்மி கடாக்ஷம் சிறிதும் கிடைக்காது என்று நயமாகக் கூறுகிறார்.

அத்த வீரனைத் தேடி வந்தணைவார்கள் செல்வம், பூமியெனும் பெண்கள். பெண்கள் எப்பொழுதும் கண் நிறைந்த கணவரையே நாடுவது இயல்பு தகாத இடத்திற்குச் சென்றால் செல்வம் பழிப்பிற்கிடமாகி விடுகிறது, பாவியின் கையில் பணம் கிடைத்தால்! அற்பனுக்குப் பவிசுவந்தால்! தகாதவனை செல்வம் அணைந்தால் அவனது அடிமையாக "கூடின பேர்கள் குடியைக் கெடுப்பதும், சொல்லச்சொல்லிப் பின்னும் காட்டிக் கொடுப்பதும் ஓடி ஓடி அற்பரைப்போய் அடுப்பதும்" ஆகாப் பெரும் பழிக்கு ஆளாக நிற்க நேர்கிறது.

அவ்விதமே தேசமும் கொடுங்கோல் மன்னன் வசம் சிக்கிக்கொள்ள நேர்ந்தால் அம்மம்மா! நினைக்கவும் முடியாத கொடுமைக்கு ஆளாகவேண்டி வருகிறது. அதனால்தான் அவ்விரண்டு செல்வங்களும் உத்தம வீரன் (அதாவது நற்செயல் மேற்கொண்டு தீச்செயல் விலக்கியவன்) எவனோ அவனைத் தேடியடைய விழைகின்றன என்று கூறுகிறது பாரதியின் பாஞ்சாலி சபதத்திலுள்ள திருதராஷ்டிரன் மொழி.

இதே கருத்தைத் திருவள்ளுவர் குறளிலும் நாம் பார்க்கிறோம்.

"அறனறிந்து வெஃகா
அறிவுடையார் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு."

## மா இலவசம்

திங்கட்கிழமை 19-5-52 தொடக்கம் அரிசி வாங்காமல் மா வாங்குவோருக்கு மா இலவசமாகக் கொடுக்கப்படும்.

ஆனால் மாவின் விலைக்குப் பதிலாக இறக்குமதிச் செலவின்பொருட்டு ருத்தல் ஒன்றுக்குக் கொழும்பில் ஒரு சத வீதமும் பிற இடங்களில் [illegible] சதவீதமும் கொடுக்கவேண்டும்.

# ஆலயங்களில் உயிர்ப்பலி இடலாமா?

"எவ்வுயிரும் என்னுயிர்போல்
எண்ணி இரங்கவும்
நின்தெய்வ அருட்கருணை
செய்வாய் பராபரமே."

மானிடப் பிறவியே உலகிற சிறந்த பிறவி என்பது வெள்ளிடைமலை. அப்படி இருந்தும் கல்வியறிவு, நற்செயல், ஜீவகாருண்ணியம் இல்லாதமாந்தர் தங்கள் தெய்வங்களாகிய ஐயனார், காளி, வைரவர் போன்ற தெய்வங்களுக்கு அளிறந்த ஆடு, கோழி முதலியனவற்றைப் பலியிட்டுப் பாவத்தைத் தேடுகின்றனர்.

என்னே அநியாயம், தம் மகவுபோல் சிறந்த ஊண் ஊட்டி வளர்க்கிறார்கள். அவைகளுக்கு வருத்தம் வந்தபோது மிகவும் இரங்கித் துடிக்கின்றார்கள் அப்படி மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது உணவு ஊட்டி வளர்த்த ஆடுகளைக் கருணைக் கடலாகிய கடவுள் வீற்றிருக்கும் ஆலயத்தின் முன் வெட்டுகின்றனர். கொடிது, கொடிது பஞ்சமா பாதகங்களுள் கொடிதல்லவோ இது.

இவைகளைக் கண்ணுற்றும் பன்றியோடு சேர்ந்த கன்றும் பகாவீ உண்ணும் எ-பதிற்கிணங்க, சிறந்த அறிவாளிகளும் அவ்வழிச் செல்கின்றனர். ஜீவபிராணிகளைக் கொல்பவர், கொல்லச் சொன்னவர், விற்றவர் இவர்கள் யாவரும் கொலைகாரரேயாவர். இதையறிந்தல்லவோ முற்றும் உணர்ந்த திருவள்ளுவரும்,

"கொல்லான் புலாலை
மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்."
என்றார்.

இதன் கருத்தை அறியாது இக்கலியுகத்தில் திருவள்ளுவரிலும் மேம்பட்ட அறிவாளிகளிற் சிலர்,

"கொன்றிடப் பாவம்
தின்றிடத் திரும்"

என்று கூறுகின்றனர்.

இவர்கள் உண்மையில் மானிட சென்மந்தானா என ஐயுறவேண்டியிருக்கிறது. இப்படி வருமென்று நினைத்தே

திருமூல முனிவர்,

"கொன்றிலாரைக் கொலச்
சொலிக் கூறினர்
தின்றிலாரை நினைச்
சொலித் தெண்டித்தார்
பன்றியாய்ப் படிவிற
பிறந்தேழ் ரகு
ஒன்றுலர் நரன் ஆணையி
துண்மையாய்."

எனக் கூறியுள்ளார்.

ஆகவே அறிவிற் சிறந்த பெரியோரே, சகோதர சகோதரிகளே, கடவுள் வழிபாட்டிற்கு உரிய இடம் ஆலயம் என்பதைச் சற்றும் மறவாதீர் இனியாகிலும் விழித்தெழுமின், எழுந்து ஆலயங்களில் பலியிடுதலாகிய இக்கொடுந் தொழிலை நீக்க உழைமின.

—சைவமணி.

## இந்தியப் பிரதமருக்கு சீன அழைப்பு

இந்திய பிரதமர் ஸ்ரீ நேரு அவர்களைச் சீனத்துக்குச்சென்றுதிரும்பும்படி சீன உப ஜனாதிபதி அழைத்திருக்கிறாரென்றும் அதை இந்திய பிரதமர் ஏற்றுக்கொண்டாரென்றும் இந்த அழைப்பு ஆசிய சமாதான மகாநாடொன்றின் தொடர்பில்லென்றும் அறியவருகிறது.

## ஆயிரம் ரூபா அறவிட ஐந்நூறு ரூபா செலவு

கிக்கடுவ - தொடந்தாவ நகர சங்கக் கூட்டமொன்றில், நகரசங்கச் செலவுச் சித்திரம் ஒன்று எடுத்துக் காட்டப்பட்டது. சங்கத்தின் வரிப்பணம் ஆயிரம் ரூபா அறவிடுவதற்கு ஐந்நூறு ரூபா செலவழித்தார்களாம். இக்காலப் பொதுஜன சேவைசெய்வோர் கண்ட புது வழி இதுபோலும்?

## உலகில் நடுவு நிலைமையுள்ள உத்தமர் பிரதமர் நேரு அவர்களே

பேராசிரியர் பேற்றண்ட்றசெல் அவர்கள் ஒரு ஆங்கிலப் பத்திரிகை நிருபர் பேட்டியில்; இந்திய பிரதம மந்திரி ஸ்ரீ நேரு அவர்களே அகில உலகிலும் உண்மையான நடுவு நிலைமையுள்ள உத்தமர் என்று வியந்து கூறியுள்ளனர். இந்த ஒப்புயர்வில்லா மதிப்புரை இந்திய நாட்டினர் வாழ்க்கையின் உன்னத நிலையை இனிது விளக்குகின்றது.

## இந்திய பாராளுமன்ற மக்கள் சபை

மேற்படிச் சபைச் சபாநாயகர் பதவிக்கு ஸ்ரீ. G. V மௌலங்கார் போட்டியிட்டு 394 வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார். அவருடன் போட்டியிட்ட பொதுவுடமைக் கட்சி அபேட்சகர் 55 வாக்குகளை பெற்றார்.

## ஆபிரிக்க அநீதி ஆட்சி

தென்னாபிரிக்க அரசாங்கம் ஆபிரிக்கரையும் இந்தியரையும் பாதிக்கும் பல செயல்களை இடைவிடாது செய்து வருகின்றது. சில சங்கங்களிலிருந்து சில தலைவர்கள் நீங்கவேண்டுமென்று இப்போ கட்டளையிடப்பட்டிருக்கின்றனர். ஏனையசட்டங்களோடு இதையும் எதிர்க்க இந்தியரும் ஆபிரிக்கரும் ஆயத்தம் செய்கின்றனர்.

## வைத்திய மாணவர் உயர்தர பரீட்சை

சர்வகலாசாலைக்குச் செல்லும் வைத்திய மாணவர் தொகை மிக அதிகரிக்கின்றது. இந்த நிலைமையைச் சமாளிக்கத் தற்போது வேறு வழி காண முடியாமலிருப்பதால், வைத்திய மாணவருடைய பிரவேசப்பரீட்சையின் தரத்தை உயர்த்த அதிகாரிகள் ஆலோசிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆகாத முறையில் ஆக்கந் தேடலாமா

( முதற் பக்கத் தொடர்ச்சி )

ளினதும் பொருளாக்கத்துக்குப் பனைகளிலிருந்தும் தென்னைகளிலிருந்தும் கருப்ப நீர் சேர்த்து அதிலிருந்து பனங்கட்டி, சீனி முதலிய உணவுப் பதார்த்தங்களை உண்டாக்கலாம். தென்னிலங்கையில் தென்னங் கருப்ப நீரிலிருந்து இவ்வித "பனங்கட்டி" சாதாரணமாகச் செய்யப்படுகிறதென்பதைத் தமிழ் மக்கள் பலர் அறியார்போலும்!

தனிப்பட்ட முறையில் மக்களுக்கும், பொதுவாக நாட்டுக்கும் மதுபானம் விளைக்கும் தீமைகளை நீக்கி, நாடெங்கும் இன்பவாழ்க்கை ஏற்படுத்த வேண்டுமானல் மதுபானம் விரைந்து நீங்க வேண்டும். இதற்குப் பிரசாரம் மாத்திரம் போதாது. மதுவிலக்குச் சட்டமும் ஆக்கவேண்டும். எம் நாட்டு அறிஞரும் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் ஒருமுகமாக உழைப்பாராளுல் மதுவிலக்குச் சட்டம் விரைவில் உண்டாகி மக்கள் இன்புற்று வாழுவர்.

## விளம்பரம்

### கட்டைவேலிக் கிராமச்சங்கம்

1. இதன் பின்னுற் காணும் வேலைகளை ஒப்பந்தத்தில் செய்வதற்கு 1952-ம் ஆண்டு ஆனி மாசம் 14ம்-திகதி பிற்பகல் 4 மணி வரையும் "சீல்" வைக்கப்பட்ட ரெண்டர்கள் ஏற்கப்படும்

2. ரெண்டர்களைக் கிராமச்சங்கக் கந்தோரில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் ரெண்டர் பெட்டியில் போடலாம். அல்லது கிராமச்சங்கத் தலைவருக்கு றிசிஸ்தர் காகிதஉறையில் அனுப்பலாம். அல்லது 1952ம் ஆண்டு ஆனி மாசம் 14ம் திகதி பிற்பகல் 4 மணிக்குக் கூட இருக்கும் கிராமச்சங்கக்கூட்டத்தில் கொடுக்கலாம். ரெண்டர்கள் வைத்து அனுப்பும் உறையின் இடதுபக்க மேற்புறத்தில் "கிராமவேலைரெண்டர்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கிராமச் சங்கத் தலைவரால் கொடுக்கப்படும் பத்திரத்திலுமாத்திரமே ரெண்டர்கள் கேட்கப்பட வேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 50/= ரெண்டர் deposit ஆகக் கட்டவேண்டும்.

4. ரெண்டர்களில் செய்யும் மாற்றங்கள் திருத்தங்கள் எல்லாம் ரெண்டர் கேட்பவரின் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்

5. தன்னுடைய ரெண்டர் ஏற்கப்பட்டதாக கிராமச்சங்கத் தலைவரிடமிருந்து அறிவித்தல் கிடைக்கப்பெற்ற இரண்டுகிழமைக்குள் ஏற்கப்பட்ட கேள்விக்காரன் ஒப்பந்தம் எழுதிய வேலையை ஆரம்பிக்கத் தவறினல் ரெண்டர் deposit திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

வேலைகள்:

1. வேரோண்டை — கேவளை ரோட்டு,
2. துன்னாலை வடக்கு எல்லை ரோட்டு,

S. Kandappu,
தலைவர்
கட்டைவேலிக்கிராமச்சங்கக்,
கந்தோர், கரவெட்டி,
15-5-52.
M. 30 20—5—52.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

### 'கிரகசாரம்'

1952 நந்தன வருஷ வாக்கிய பஞ்சாங்கங்களில் விளங்குவன:—

1. யாழ்ப்பாணம் கொக்குவிற் பஞ்சாங்கத்தில் ஆனிமீ 8உ, 54. 45 ல் அத்தம் 2 ல் சனி என்றும், கார்த்திகைமீ 5உ, 42. 32 ல் வக்—பரணி 2 ல் குரு என்றும் குறிக்கப் பெற்றிருக்கின்றன.

2. கொழும்பு கலைமகள் வாக்கிய பஞ்சாங்கத்தில் ஆனிமீ 3உ, 17. 15 ல் அத்தம் 2 ல் சனி என்றும், கார்த்திகைமீ 12உ, 27. 10 ல் வக்—பரணி 2 ல் குரு என்றும் குறிக்கப் பெற்றிருக்கின்றன.

3. பிரம்மஸ்ரீ G. S வெங்கட்ராமய்யரவர்கள் வெளியிட்ட மருத்துவக்குடி (தஞ்சாவூர்—ஜி தென்னிந்தியா) வாக்கிய பஞ்சாங்கத்தில் மேற்கண்ட சாரக் குறிப்புகள் இரண்டுலக்கக் கலைமகள் வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளை ஏற்று நிற்கின்றன.

வாக்கிய பஞ்சாங்கஙளுள் இம்மூன்றுமே சிறப்புடைத்தென்பர் பலரும். இவையுள்ளும் கிரகசாரங்கள் ஏற்று நிற்கும் நிலையுளவைகளை உலகர் உற்று நோக்கி, அவைகளின் வாக்கிய சுத்தங்களின் திறனறிந்து, தெளிவானவைகளை ஆதரிக்க வேண்டுமென அன்பை அவாவுகின்றேன். அங்ஙனம் நீங்கள் சீர்தூக்குமமயம் கணிதர்களின் தவறு நீங்கப்பெறும், அதனுல் யாவும் நலனுடைத்தாகும்.

பஞ்சாங்கங்கள் தவறிலாது வெளிவர இது ஓர் இன்றியமையா வெளியீடென்றே எவரும் கவனஞ்செலுத்த வேண்டும்.

சிவசூரியநாராயணபிள்ளை
பஞ்சாங்க கணிதர்
இட்டமொழி
திருநெல்வேலி
தென்னிந்தியா.


நீங்கள் இளமைப்பருவத்தை அடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல் வாழ்க்கையில் அதியற்புத சுகந்தரும நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம், இடுப்புவலி, வாய்வு வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0
குருபஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும். அருமையானது,
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)
M. 16. 25-4-52—25-10-52.


கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.


திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ருணிமார்க்ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சோமர் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

சாலாமிஸரி லேகியம்
இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேசபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.
ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.
ஒருறாத்தல் விலை ரூபாய் 25-00, அரைறாத்தல் விலை ரூபாய் 12-50, கால்றாத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.
சிவஞான பற்பொடி
சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.
பொட்டணம் 1-க்கு விலை சதம் 25
K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம்ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponne, Jaffna on Tuesday 20 May, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org